அமரன் கதை

தங்கம்மாள்—பாரதி

ஓம்கார நூலகம்

புதுக்கோட்டை

1946

அமரன் கதை

முதற் பதிப்பு :
ஜய, கார்த்திகை

விலை அணா. 14

மதராஸ் ரிப்பன் பிரஸ், ராமச்சந்திரபுரம் (புதுக்கோட்டை ஸ்டேட்)

அமரன் கதை

தங்கம்மாள்—பாரதி

ஓம்கார நூலகம்
புதுக்கோட்டை
1946

பதிப்புரை

உண்மைகள் கூறி, உணர்ச்சியை ஊட்டி, புத்துயிர் அளித்து, நவயுகத்தைப் படைத்த வரகவி நமது சுப்பிரமணிய பாரதியார்! புகழுடல் பெற்று என்றும் இலங்கிடும் இப் புனிதர், காலத்தை வென்றவர்; சாகா வரம் பெற்றவர், அவர் அமரர்.

அந்த "அமரன் கதை" யை, கவி பிறந்த நாளாகிய இன்று வெளியிடுதல் பொருத்த மானது, ஜயந்தி கொண்டாடுவது மாகும். அமர கவியின் அருமைப் புதல்வியே 'கதை' யைத் தந்து உதவியதற்கு எங்கள் நன்றி.

புதுக்கோட்டை
விய, கார்த்திகை,
கக

ஓம்கார நூலகம்.

பொருளடக்கம்

எண்		பக்கம்
	பதிப்புரை ...	5
	முகவுரை ...	7
1.	அமரன் கதை ...	9
2.	பஞ்சாய் உழைப்பேன் பாரோர் தமக்கு	11
3.	அரசருடன் சரியாசனம் ...	14
4.	ஆசானின் அன்பு ...	19
5.	கும்மிப் பாட்டும் குழந்தையின் செயலும்	21
6.	தந்தையின் சிந்தனை; தனயனின் மகிழ்வு	24
7.	திருவாதிரைத் திலகம் ...	27
8.	கீரைக் குலதெய்வம் ...	31
9.	கல்யாணமும் கலைமகளின் அருளும் ...	35
10.	பல பல தோற்றம் பாரத நாடு ...	38
11.	உண்மையின் உயர்வு ...	42
12.	அரணில்லாச் சிறைக்கு அன்புடன் செல்லல்	46
13.	காதலின் மாண்பு ...	48
14.	மறைந்த ஒளி ...	51

முகவுரை

"அமரன் கதை" அபூர்வக் கற்பனை யன்று; உண்மைச் சம்பவமே! உண்மைக் கவிஞன் ஆயிரம் வருஷத்திற்கு ஒருமுறை தோன்றுகின்றான் என்று கூறுகிறார்கள். "உலகத்தில் மகத்தான செயல்களால் கிளம்பும் அலைகள் சூலகதியின் எல்லைவரை எட்டலாம். ஆயினும் ஓரிரண்டு தலைமுறைக்குள் மறைந்து விடும். மிகப் பெரிய புரட்சி கூட அருவமாய் மறைந்து விடுகிறது. கவிதை ஒன்று தான் அந்த மகத்தான செயல்களின் ஞாபகத்தை அழியாது காக்கும்." என்பது அறிஞர் வாக்கு. ஒவ்வொரு தேசத்திலும் கவிஞன் மட்டும் என்றும் வாழ்கின்றான். கவிஞர்கள் சிரஞ்சீவிகள்! உலகக் கவிஞரில் ஒருவரான எந்தை **பாரதி** அமரத்தன்மை பெற்றிருந்தார் என்பது, அவரது பாடல்களை ஊன்றிப் படித்தால் தெரிய வரும்.

பாரதியாரைப் பற்றிப் பல கற்பனைகள் உலாவுகின்றன. அளவு கடந்தால் அமுதமும் விஷமாகி விடும் (புகழ்வதும் கூடத்தான்). நான் எழுதிய **"பாரதியார் சரித்திர"** த்தில் **(சக்தி மலர்)** வெளி வராத சில சம்பவங்களையே இதில் எழுதியிருக்கிறேன்.

"அமரன் கதை" எங்கள் குடும்பத்தின் மித்திரனாகிய "சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் சென்ற வருஷம் வெளிவந்தது.

இப்பொழுது, பாரதியார் விண்ணுலகஞ் சென்ற நாளையே தமிழ் நாட்டில்-அன்று-தமிழர் குடியேறியுள்ள ஒவ்வொரு ஊரிலும் திருவிழாவாக் கொண்டாடி வருகிறார்கள். புதுக்கோட்டை "ஓம்கார நூலக"த்தார் அமரகவி பாரதியாரின் பிறந்த நாளைப் போற்றுவதற்கு அறிகுறியாக "அமரன் கதை"யைத் தமிழ் நாட்டிற்கு அளிக்க முன்வந்திருக்கிறார்கள். அவர்கள் அன்புக்கு நன்றி. அவர்கள் முயற்சி வெல்க!

கைலாசபுரம்,
திருநெல்வேலி
26—11—1946.

தங்கம்மாள்—பாரதி

அமரன் கதை

1. கதையின் காரணம்

[இடம் : விண்ணுலகம். தேவரும் தலைவனும் வருகிறார்கள்]

தேவராஜன்: தோழரே, மண்ணுலகத்தில் மானிடர் அறிவிழந்து போயினர். அவர்களை இந்த நிலையில் விட்டிருப்பது ஆபத்து. அவர்களுடைய அடிமைத் தளை நீக்க வேண்டும்; தந்தையாகிய தனிமுதற் பொருளை நாம் யாவரும் வணங்குவாம்.

[தேவரும் தலைவனும் பாடுகிறார்கள்:]

உண்மையாய் உணர்வாய்
உலகெலாங் காப்பாய்
நித்தமும் தோன்றி
நித்தமும் அழிந்தும்
தோன்றும் வினையாய்
தொன்மைப் பொருளாய்
எல்லா வுயிரினும்
இயங்கும் பொருளே;
அறிவினா லுன்னை
அடைந்தோர் தம்மை
நெறி தவறாது
நித்தமும் காப்பாய்!

ஒளித்தேவன் : ஒருவனைக் கொண்டு சிறுமை நீக்கி நித்திய வாழ்விலே நிலை பெறச் செய்தால், மானிடச் சாதி முழுது நல்வழிப் படும்.

சுடர்த்தேவன் : பரத கண்டத்திற் பாண்டிய நாட்டிலே விரதந் தவறிய வேதியர் குலத்தில் பாரதி யென்பான் வாழ்ந்திடுகின்றான். தோளிலே மெலிந்தான் ; துயரிலே யமிழ்ந்தான் ; நாளும் வறுமை நாயொடு பொருவான் ; செய்வினை யறியான், தெய்வமுந் துணியான் ; ஐய வலையி லகப்பட லாயினன். இவனைக் காப்போம் ; இவன்புவி காப்பான்.

வாயுத்தேவன் ; உயிர் உளங் கொடுத்தேன். உயிரால் வெல்க.

தேவராஜன் : மதியின் வலியால் மானிடன் வெல்க.

சூரியன் : ஒளி பெறும் அறிவு ஓங்கும் பெரும் புகழ்.

இந்திரன் ; என்றும் வலிமை இவனும் குன்றான்.

தீ : வேகம் இவனை விரும்பி வந்தடையும்.

அசுவினி தேவர்: மாறா இன்பம் மனத்தி லுறையும்.

தேவர் : இளமை குன்றான் எக்கா லத்தும்.

ஒலி : தெளிவின் வடிவைத் தெளிவுறக் காண்பான்.

எல்லாரும் : மகனே ! மக்கள் மயக்கந்திர, பகையது போக்கி, பாழ்பயம் நீக்கி, கவலையை வென்று களித்துல கோர்கள் தவத்தினிலுள்ளம் தான்வைப்ப தற்கே வழியது செய்வாய் வானவர் அருளால்.

[மறைகிறார்கள்.]

2. பஞ்சாய் உழைப்பேன் பாரோர் தமக்கு

எட்டையபுரம் குளக்கரை; சிறுவன் சுப்பையா உட்கார்ந் திருக்கிறான். அவனது கண்கள் சுற்றிலுமுள்ள காட்சி களில் வட்டமிடுகின்றன. தொலைவில் வரும் பெண்களைப் பார்க்கிறான். அவர்கள் தலையில் ஏதோ சுமைகளைச் சுமந்து கொண்டிருக்கிறார்கள்; அது என்ன? பருத்தி மார்க் கட்டு. பருத்தியில் அவன் மனம் சென்று விடுகிறது. பருத்தி விளையும் காட்டுக்கே விரைகிறது அவன் மனக் குதிரை. எங்கும் ஒரே பொன் மலர் பூத்துக் குலுங்கு கிறது. அடுத்த காட்சி: பருத்தி வெடித்துக் கீழே சிதறியிருக்கிறது. சிறுமிகளும் பெண்களும் சிதறியுள்ள பஞ்சுகளைப் பொருக்கிச் சேகரித்துப் புஷ்பம் போன்ற அவற்றைத் தங்கள் மடி நிரம்பக் கட்டிக் கொண்டிருக் கிறார்கள். பின்பு பருத்தியின் பின்னே சென்றான்; ஆலை யிலும் தறியிலும் அது படும் பாடும், உருவமே வேறாகிப் புடவை யென்றோ வேஷ்டி யென்றோ மாறு பெயர் தாங்கி மனிதர்களுக்கு உதவுவதற்குக் கட்டுக் கட்டாக வெளிப் படுவதும் அவன் மனத்திலே தோன்றுகிறது. "பருத்தி படும் பாடு" என்று அதைச் சிறப்பிக்கும் பழமொழியும் ஞாபகம் வருகிறது அவனுக்கு. தனக்குள் பேசிக்கொள் கிறான்:

"ஆம் இந்தப் பருத்தியைப் போல் என்னுடலும் மனிதருக்கு உதவ வேண்டும். மற்றவருக்கு உதவாமல் சுயநலம் பாராட்டும் பிழைப்பு ஒரு பிழைப்பா?

"உதவிசெய் யாதகை உறிக்கு நிகராம்
பதவிகள் மனிதனைப் பதடி யாக்கும்
நிதிதனை விரும்பி நித்தமும் உழல்வோர்
கதியென்றும் காணுக் கசடரே யன்றோ!

உடல்தனை யுழைப்பேன்; உண்மையே பேசுவேன்
மடமையை நீக்க மறவேன் கேளீர்!
பஞ்சினைப் போலே பாரிலுள் ளோர்க்கு
வஞ்சனை யின்றி வாணாள் தன்னை
உடமை யாக்குவேன் உறுதி யிதுவே"

நண்பன் சேகரன் வருகிறான்;

"சுப்பையா, எத்தனை கோட்டை பிடித்தாயிற்று; இன்னும் எத்தனை பாக்கி?"

சுப்பையா: சேகரா, ஆணவக் கோட்டையைத் தகர்த்தெறிந்தேன்; ஐம்பொறியை யாட்சி கொண்டேன். விட்டது பாச வினை விலங்கே.

சேகர்: (கல கல வென்று சிரித்து) சுப்பையா, இத்தனை தைரியமும், இத்தனை துணிவும் உனக்கு எப்படி ஏற்பட்டது? இந்த மெலிவான உடலில் இத்தனை வைராக்கியம் எப்படி வந்தது?

சுப்பையா: நண்பா, என்ன வார்த்தை சொன்னாய்? எங்கு சொன்னாய்? யாவர் முன்பே? நமது ஊரின் மண்ணின் பெருமை உனக்குத் தெரியாதா? நமது ஊர் முயல்கள் பகைவரின் வேட்டை நாய்களைக்கூட விரட்டியடிக்கும் வல்லமை பெற்றிருந்த செய்தி, நம் தாத்தா சொல்ல நீ கேட்டதில்லையா? தீரவைராக்கியங் கொண்ட வீரசைவர் பரம்பரையில் தோன்றிய எனக்கு ஆணவக் கோட்டையைத் தகர்த்தெறிவது பெரிய காரியமா?

மற்றொரு நண்பன் சதாசிவன் வருகிறான்,

சதாசிவன்: சுப்பையா, தாத்தாவின் பூஜை நேரமல்லவா? நீ இங்கு உட்கார்ந்திருக்கிறாயே; தாத்தா காத்துக் கொண்டிருக்க மாட்டாரா?

சுப்பையா : தோழரே, மறந்து விட்டேன்; போவோம் வாருங்கள்.

பாதி வழி வரும்போதே சுப்பையாவின் வீட்டிலிருந்து சாம்பிராணிப் புகையும் மலர்களின் மணமும் இவர்களை வரவேற்கின்றன. பூஜை மணி ஒலிக்கிறது. வீட்டில் தீபாராதனை முடிந்து சுப்பையாவும் தாத்தாவும் இறைவனை வழிபடுகிறார்கள்.

" நித்தியமாய் நிர்மலமாய் நிஷ்களமாய்
நிராமயமாய் நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய், தூரமுமாய், சமீபமுமாய்
துரியநிறை சுடரா யெல்லாம்
வைத்திருந்த தாரகமாய் ஆனந்தமய மாகி
மன வாக் கெட்டாச்
சித்துருவாய் நின்ற ஒன்றைச்
சுகாரம்பப் பெருவெளியைச் சிந்தை
செய்வாம்! "

3. அரசருடன் சரியாசனம்

[இடம்: எட்டையபுரம் அரண்மனை. மகாராஜா, கவிஞர்கள், வித்வான்கள், பண்டிதர்கள், பரிவாரங்கள் அமர்ந்திருக்கிறார்கள். சுப்பையா வருகிறான் ஏதோ யோசித்துக்கொண்டு.]

மகாராஜா: சுப்பையா, வா, அப்பா உட்கார்.

மற்ற வித்வான்கள்: (தமக்குள்) இந்தச் சிறுபையனை மகாராஜா அவர்கள் அளவுக்கு மிஞ்சிப் புகழ்கிறார்கள். அதனால் தான் அவனுக்கு இத்தனை பெருமை.

ஒருவர்: இல்லையப்பா; நமது மகாராஜா புகழ வேண்டுமானால், தகுந்த காரணம் இருக்க வேண்டும். மகா ரசிகரல்லவா நமது மகாராஜா.

மற்றவர்: இருங்கள்; அவர்கள் சம்பாஷணையைக் கவனிப்போம்.

மகாராஜா: சுப்பையா, அண்ணாமலை ரெட்டியார் இயற்றிய காவடிச் சிந்து பாடுகிறாயல்லவா? அதேபோல நீ கவி பாட முடியுமா?

சுப்பையா: மகாராஜா, என் அகத்தி லுறையும் நாமகளுக்கு இது ஒரு கடினமான விஷய மன்றே; நொடிக்குள் இயற்றுவேன்.

மகாராஜா: சுப்பையா, எல்லாரும் நாமகள் நாவினில் வாசம் செய்வாள் என்பார்கள்; நீயோ உன் அகத்தினில் ஒளிர்வதாகச் சொல்கிறாயே.

சுப்பையா: எல்லா மறிந்த தாங்கள் இவ்வண்ணம் கேட்கிறீர்களே; என்னைச் சோதிக்கவா?

மகாராஜா: சும்மா சொல்லப்பா; உனது பேச்சைக் கேட்டால் எனக்கு மிகவும் சந்தோஷம் ஏற்படுகிறது.

சுப்பையா: "குழலினிது யாழினி தென்பர் தம்மக்கள்
மழலைச் சொற் கேளா தவர்"

என் பேச்சில் இத்தனை விருப்பங் கொண்ட தங்களுக்குக் கூறாமல் வேறு யாரிடம் பேசவேண்டும்? மகாராஜா, ஒரு மனிதனுக்கு அகமே புறம். ஒரு மனிதனைப் புறநிலையி லிருந்து அவன் அகத்தை அறிந்து கொள்ளலாம். மனித னுக்கு அவன் உள்ளத்தில் ஒளி யுண்டானால்த் தான் அவன் வாக்கினில் தேன் துளிர்க்கும். அவனது உள்ளம் மாசுற்றிருந்தால், அவனது வாயிலும் தீய சொற்கள், சுடு சொற்கள் தான் உலவும்; அவனது அகம் தெளிந் திருந்தால் அவன் வாயிலும் இனிய சொற்கள், அன்பான வார்த்தைகள் வெளிப்படும்.

மகாராஜா: சுப்பையா, இதற்கு ஏதாவது கதை மூலமாக உதாரணம் சொல்லேன்.

சுப்பையா: மகாராஜா, இதற்கு விக்கிரமாதித்தன் கதையையே எடுத்துக் கொள்ளலாம்: விக்கிரமாதித்த னுக்கு இந்திரன் ஸன்மானம் அளித்ததாகக் கூறப்படும் சிம்மாஸனம் பிற்காலத்தில் மண்ணில் புதையுண்டு விட்டது; வெகுகாலத்திற்குப் பின் காட்டிற்கு வேட்டைக் குப் போன போஜ மகாராஜாவின் சேனைகள் ஓரிடத்தில் தங்கியிருந்தன. அந்த சமயத்தில் ஒரு ஆட்டிடையன் ஒரு மண்மேட்டில் ஏறி யுட்கார்ந்து தனது ஆடுகளைக் காவல் செய்து கொண்டிருந்தான். சூழ்ந்திருந்த சேனை களைப் பார்த்து ஆட்டிடையன் பேச ஆரம்பித்தான்: "வாருங்கள் சகோதரர்களே; எல்லாரும் வாருங்கள். நீங்கள் இந்தக் கடும் வெய்யிலினால் தாக்குண்டு மிகவும் களைப்படைந்திருக்கிறீர்கள். இதோ இந்தப் பெரிய

ஆலமரத்தடியில் எல்லோரும் உட்காருங்கள்; நான் சென்று உங்களுக்கு விடாய் தீர்க்க செவ்விள நீரும், நுங்கும், கனிவகைகளும் கொண்டு தருவேன்" என்று கூறினான்.

படைத் தலைவர்களும் சைன்யங்களும் இதைக்கேட்டு வியப்புற்றனர். "யாரோ பெரிய மகான் போலும்! இல்லாவிட்டால் ஒரு அரசரின் பரிவாரங்களாகிய நமக்கு விருந்தளிப்பதாகச் சொல்ல முடியுமா? ஒருக்கால் வசிஷ்ட முனிவரைப்போல் தவ வலிமையால் காமதேனுவை அழைத்து விருந்து செய்வாரோ!! என்னவோ" என்று தமக்குள் பேசிக்கொண்டனர்.

அந்த இடையன் மண் மேட்டிலிருந்து கீழே இறங்கினான். உடனே வெறி கொண்டவன் போல "யாரையா நீங்கள்? இது என்ன கூட்டம்! போங்க ஐயா. நீங்கள் இப்படிக் கூட்டமாக வந்திருப்பதைப் பார்த்தால் என் ஆட்டு மந்தையைக் கவர்ந்து செல்ல வந்திருக்கிறீர்கள் என்று தோன்றுகிறதே" என்று கூச்சலிட்டான். இதைக் கேட்ட போர் வீரர்கள் பின்னும் வியப்பில் மூழ்கினர். மறுபடியும் ஆடுகளைக் கணக்குப் பார்க்க மண்மேட்டில் ஏறினான். உடனே "சகோதரரே, வாருங்கள், உட்காருங்கள். உங்களுக்கு வேண்டியவற்றை நான் கொடுக்கிறேன். பாருங்கள்" என்றான்.

இவன் வார்த்தைகளைக் கேட்டவுடன், சேனையில் பலத்த கலகலப்பு ஏற்பட்டது. எல்லோரும் வயிறு குலுங்கச் சிரித்தனர். மந்திரியும் இதைக் கவனித்தான். "படை வீரர்களே! சற்று விலகுங்கள். இந்த மண் மேட்டில் ஏதோ விசேஷம் இருக்கிறது; இதை ஆராய வேண்டும். இதோ, இங்கு புல் செதுக்க வந்துள்ள கிராமத்து இடையரிடமிருந்து மண்வெட்டியை வாங்கி

இந்த மேட்டை வெட்டுங்கள்" என்றான். மந்திரியின் கட்டளைப்படி மேடு வெட்டப்பட்டதும் ரத்ன சிம்மாதனம் ஒன்று இருக்கக் கண்டார்கள். பின்பு இடையன் பேச்சிற்குப் பொருள் அவர்களுக்கு விளங்கிவிட்டது. சிம்மாதனத்தைத் தமது அரசரிடம் சேர்ப்பித்தார்கள் என்பது கதை.

இந்தக் கதையில் நமக்கு வேண்டியது இடையனின் மனோநிலை. தெய்விக சிம்மாதனத்தின் மீது ஏறியதால் அவன் மனம் தூய்மை பெற்றது; உடனே அவன் வாக்கிலும் அமுதம் போன்ற நல்வார்த்தைகள் வெளிவந்தன; கீழே இறங்கியவுடன் அவன் மனம் சூன்யம் அடைந்தது; வாக்கில் அசுத்தமான வார்த்தைகள் பிறந்தன. இவ்வளவு தான்.

மகாராஜா: சுப்பையா, உன் பேச்சைக் கேட்டு என் அகம் குளிர்ந்தது. இனி எனது செவிகளுக்கு உனது இன்னிசை மூலம் சிறிது விருந்தருள் அப்பா.

சுப்பையா: [பாடுகிறான்]

" ஆசைநிக ளத்தினை நிர்த்தூளி படவுதறி
ஆங்கார முளையை யெற்றி,
அத்துவித மதமாகி, மதம்ஆறும் ஆறுக
அங்கையின் விலாழி யாக்கிப்
பாசஇருள் தன்னிழ லெனச்சுழிந் தார்த்துமேல்
பார்த்துப் பரந்த மனநைப்
பாரித்த கவளமாய்ப் பூரிக்க வுண்டுமுக
படாமன்ன மாயை நூறித்
தேசுபெற நீவைத்த சின்முத்தி ராங்குசச்
செங்கைக் குளே யடக்கிச்
சின்மயா னந்தசுக வெள்ளம் படிந்துநின்
திருவருட் பூர்த்தி யான

வாசமுறு சற்சார பீடத்தன்னை யொருஞான
மத்தகஜ மெனவளர்த்தாய்
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபினில்வரு மௌன குருவே !''

மகாராஜா : சபாஷ் ! சுப்பையா, நீயும் எனது யானைக் குட்டி தான் என்று கூறி மகிழ்ந்தார்.

4. ஆசானின் அன்பு

[எட்டையபுரம் பள்ளிக்கூடம். உபாத்தியாயர் கையில் பிரம்புடன் வீற்றிருக்கிறார். பிள்ளைகள் பாடம் ஒப்புவிக்கிறார்கள். ஆத்தி சூடிப் பாடம் நடக்கிறது.]

கோபு : *[சொல்லுகிறான்.]*

" அறஞ்செய விரும்பு "

சுப்பையா : *(தனக்குள்)* அகரத்தில் வரும் சொற்கள் எத்தனை மதுரமானவை! "அம்மா, அறம், அன்பு, அழகு." அழகற்ற சொற்கள் : அடிமை, அகந்தை, அச்சம். அதே போல ஒவ்வொரு எழுத்திலும் நல்ல—தீய பொருள் கொண்ட சொற்கள் ஆரம்பிக்கின்றன. என்ன ஆச்சரியம்! எல்லாவற்றிலும் இன்பமுந் துன்பமும் கலந்தே யிருக்கின்றன. "புகை நடுவினில் தீ யிருக்கிறது" "பகை நடுவினில் அன்பு இருக்கிறது. பகை எதனால் ஏற்படுகிறது? எதிரியிடம் உள்ள நற்குணம், செல்வங்கள், நற்பொருள்கள் இவைகளைப் பார்த்து நமக்கு அவைகளின் மேல் விருப்பம் உண்டாகிறது. ஆனால், அவைகளை அவனிட மிருந்து நம்மால் அடைய முடியாவிட்டால் அவன் பேரில் பொறாமை உண்டாகிறது; உடனே பகை யுண்டாகிறது."

சீனு : *[பாடுகிறான்]*

" நெல்லுக் கிறைத்த நீர்
வாய்க்கால் வழியோடிக்
கல்லுக்கு மாங்கே கசியுமாம்,

சுப்பையா : *[எழுந்தான்]* சீனு! உளரேல், உளரேல், உளரேல்......!

சீனு: தெரியுமடா சுப்பையா!

"தொல்லுலகில் நல்லா ரொருவ ருளரேல்
அவர் பொருட் டெல்லார்க்கும் பெய்யும்
மழை."

சுப்பையா: அடே! 'கல்லுக்கு மாங்கே கசியுமாம்' என்றுயே, அதை யல்லவா உளரேல் என்று உனக்குச் சொன்னேன்!

உபாத்தியாயர்: சுப்பையா, சூத்திரப் பையன்கள் தப்பிதந் தான் போடுவார்கள்; வாக்குச் சுத்தம் இராது.

சுப்பையா: "சாதி இரண் டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியார் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி."

இதைக் கேட்டதும் உபாத்தியாயருக்குக் கோபம் மூண்டது.

உபாத்தியாயர்: பாடம் ஆரம்பித்தது முதல் இதுவரை தனக்குள்ளாகவே முணுமுணுத்துக் கொண்டிருந்தாய்; இப்போது பிரமாதமாய்க் கவிதை பாடுகிறாய். புலவரே, பெஞ்சியின் மேலேறி நின்று பாடம் சொல்லும் என்றார்.

சுப்பையா: [பெஞ்சியின் மேல் நின்றவாறு]

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு" என்றான்.

சுப்பையாவைக் கடிந்து கொண்டதற்காக உபாத்தியாயர் மனம் வருந்தினார். பின்பு, சுப்பையா! கீழே இறங்கு அப்பா; உன்னிடம் கலைமகள் அம்சமிருப்பதைச் சில சமயம் நான் மறந்துவிடுகிறேன். என்று சொல்லி சுப்பையாவின் முதுகில் தட்டிக்கொடுத்தார். "எழுத்தறிவித்த இறைவா" என்று வணங்கினான் சுப்பையா.

5. கும்மிப் பாட்டும் குழந்தையின் செயலும்

எட்டையபுரத்தில் ஒரு வீட்டின் வாயிற்புறம், அங்கு பெண்கள் கும்மி யடிப்பதற்குச் சேர்ந்து நிற்கிறார்கள். அவர்கள் முகத்தில் குதூகலமும், பரபரப்பும் காணப் படுகின்றன. நடுவில் குத்து விளக்கு வைத்திருக்கிறது. சூழ நின்று கைகளைக் கொட்டுகிறார்கள் பெண்கள். இதோ ஒரு பெண் பாட்டைத் துவக்குகிறாள்; மற்றவர்கள் சந்தம் வைத்தும் பாடுகிறார்கள். சுப்பையாவும் எதிர்த் திண்ணையிலிருந்து அந்தப் பெண்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறான். அந்தப் பெண்களின் கூட்டம் அன்னக் கூட்டத்தைப் போல் தோன்றுகிறது, அவன் கண்களுக்கு. அவன் மனம் பெண்கள் பாடும் பாட்டில் லயித்து விடுகிறது. [பாட்டு]

"கோபியர்கள் அன்னம் போலே
கூடி யொருநாள்
கோபாலன் மகிமை தனைக்
கூறத் துணிந்தார்"

யசோதை யிடம் வந்து விட்டனர் அதிகாலையில்.

" எட்டாது உறியில் பாலைத்
தட்டிக் கோலாலே—
எஞ்சிய வெண்ணெயைப் பூனைக்
கெறிந்து விட்டான் "

யசோதை, இவர்கள் எல்லாரும் சேர்ந்து வந்திருப்பதி லிருந்தே, தன் பிள்ளையைப் பற்றிப் புகார் சொல்லத் தான் வந்திருக்கிறார்கள் என்று ஊகித்துக் கொண்டாள். ஆயினும் தாய்ப் பாசம் அந்தப் பெண்களின் பேரில் கோபமும் எரிச்சலுமாய் வருகிறது. அவள் வாயி லிருந்து வார்த்தை கடுமையாயும் வெளிவருகிறது.

"ஆமடி கோபி நோக்கு
விடிந்த வுடன்
ஆரவாரம் செய்வதற்கு
ஆள் கிடைத்ததோ?"

"சட்டமாகச் சொல்ல வந்த
சமத்திடைச்சி, நீயும்
கிட்டவிருந்த தூணிலே
கட்ட லாகாதோ?"

கோபிகளுக்கு, தாயிடம் சொன்னாலாவது கண்ணனின் ஆர்ப்பாட்டம் சிறிது அடங்கலாம் என்ற எண்ணம் இருந்தது. யசோதையின் பேச்சு அவர்கள் மனத்திலிருந்த சிறு நம்பிக்கையையும் போக்கவும், வருத்தம் இன்னும் அதிகப்படவும் செய்தது; கோபமும் வந்தது. பாலும் வெண்ணெயும் போனதால் ஏக்கமும் அவமானமும் அவர்களைச் சூழ்ந்தன. ஆனால், பதில் மட்டும் சொல்ல அவர்கள் பின்வாங்க வில்லை. பெண்க ளல்லவா?

"கட்டப்பிடி படாண்டி
கபடனடி கண்ணன்
கண்டார் சிரிக்க லாச்சே
பண்டமும் போச்சே"

கோபியர் கோபத்தோடும் ஏமாற்றத்தோடும் வீடு செல்கிறார்கள். பின்பு யசோதை, பிள்ளையை மடிமீதிருத்தி நல்ல வார்த்தை சொல்கிறாள்:

"கண்மணியே ஒருவரோடும்
சண்டை செய்யாதே!
உற்ற பாலர் ஒருவரோடும்
ஒன்றும் பேசாதே!"

கண்ணன் பயந்தவன் போலிருக்கிறான். தாய்க்குப் பிள்ளைமேல் வாஞ்சை மிகுதியாகி விட்டது. "ஐயோ, இந்த சாதுப் பிள்ளையையா, இந்தப் பெண்கள் இப்படித்

தூற்றிக்கொண்டு திரிகிறார்கள். இந்தக் குழந்தை பிறக்க எத்தனை தபசு செய்தேன்" என்று, கழிந்த நாட்கள் அவளுக்கு நினைவுக்கு வந்து விட்டது. பிள்ளைத் தாகத்தினால் மனது பட்ட கவலையையும், அதற்காக, தான் செய்த நோன்புகளும் ஞாபகத்திற்கு வருகின்றன.

"துளசி வைத்து நீர் சொரிந்தேன்
தொண்ணூறு நாட்கள்
அரசு வைத்து நீர் சொரிந்தேன்
ஆயிரம் நாட்கள்"

என்று ஆனந்தப்படுகிறாள். பாட்டும் முடிந்தது.

யசோதையும் கண்ணனும் மனத்தை விட்டு நீங்கவில்லை சுப்பையாவுக்கு. தானும் கோபியராக மாறி கண்ணனிடம் விளையாட அவன் மனம் விரும்பியது. அவன் மனத்தில் (கண்ணனின்) தீராத விளையாட்டுப் பிள்ளையின் விஷமங்கள், ஒன்று, பத்து நூறாகக் காட்சி யளித்தன. அவை நல்ல தமிழ்க் கவிதையாகி நமக்கும் காட்சி தருகின்றன.

6. தந்தையின் சிந்தனை; தனயனின் மகிழ்வு

[இடம்: சுப்பையாவின் வீடு]

தகப்பனார் வாயிலி லிருந்து உள்ளே நுழைந்தார். எப்போதும் கடு கடுவென்று இருக்கும் அவர் முகம், இன்று மகிழ்ச்சியினால் மலர்ந்திருந்தது. இதற்கு என்ன காரணம்? என்று யோசித்தான் சுப்பையா. தகப்பனார், மடியிலிருந்து ஒரு காகிதப் பொட்டலத்தைப் பிரித்தார். அதில் பளபளப்பான ஏதோ ஒரு பொருள் தென்பட்டது. உடனே "குழந்தாய்!" என்று அழைத்தார். குழந்தை பாகீரதி ஓடி வந்தாள். அந்தக் குழந்தையின் முகத்தில் அறிவின் ஒளி எப்படி வீசுகிறது! அன்பு நிறைந்த பார்வை! சூதில்லாத உள்ளம்! அவளைப் பார்த்ததும் சுப்பையாவின் மனம் மகிழ்ச்சியினால் மலர்ந்தது. தந்தை அன்போடு, "பாகீரதி! இதோ பார் திருகுப்பூ; உன் பின்னலில் திருகிக் கொள்" என்றார். பாகீரதி சந்தோஷத்தினால் பூரித்தவளாய் "அப்பா; ரோஜாப்பூ திருகுப் பூவா? அடுத்தாத்து விசாலாக்ஷி ஜெவந்திப்பூத் திருகுப் பூத்தான் வைத்துக் கொண்டிருக்கிறாள்" என்றாள்.

தந்தை: இது உனக்குப் பிடிக்க வில்லையா அம்மா!

பாகீரதி: இல்லேப்பா, ஜெவந்திப்பூத் திருகுப்பூவை விட இதுதான் ரொம்ப நன்றாயிருக்கிறது. இதுதான் புது மாதிரியா யிருக்கிறது.

தந்தை: சரி, இதில் இரண்டு திருகுப் பூக்கள் இருக்கின்றன. உனக்கு எடுத்துக்கொள்.

குழந்தை: (திருகுப்பூவை மாறி மாறிப் பார்த்துவிட்டு) "அப்பா, எனக்குச் சின்னது போதும்."

தந்தை : ஏனம்மா, பெரியதை வேண்டுமானாலும் நீ எடுத்துக் கொள்ளேன்.

பாகீரதி : இல்லேப்பா, எனக்குச் சின்னதுதான் பிடித்திருக்கிறது; பெரியதை என் சித்திக்குக் கொடுத்து விடலாம்.

குழந்தையின் பேச்சைக் கேட்டதும் தகப்பனாருக்கு கண்ணீர் ததும்பியது. என்ன அன்பு, எத்தனை புத்திசாலித்தனம் இந்தக் குழந்தையின் பேச்சிலிருக்கிறது. சில குழந்தைகள், சாப்பிடும் இலைகூடத் தனக்குப் பெரியதாகத் தான் வேண்டும் என்று முரண்டு பண்ணுவார்கள் இவள் வயதில் ; இவளோ, இந்தச் சிறு வயதில் குடும்பத்தில் பெரியவர்கள் தீர்மானிப்பது போல் தீர்மானித்துச் சொல்கிருள். அவள் குரலில் ஒரு கண்டிப்பும் தொனிக்கிறது. அவள் தாய் இருந்து இந்தக் குழந்தையின் மதலை மொழியைக் கூடக் கேட்காமல் போனாள்! என்று தமது முதல் மனைவியின் மேல் ஞாபகம் செல்ல, பேசாமல் நின்று கொண்டிருந்தார். குழந்தை, தகப்பனார் ஏதோ யோசனை செய்வதைப் பார்த்து விட்டு "அப்பா கொடுங்கள் அதை" என்று வாங்கி உள்ளே ஓடோடியும் சென்று, தனது சிறிய தாயாரின் தலைப் பின்னலில் பெரிய திருகுப்பூவைத் திருகி விட்டு, சின்னதை, தான் அணிந்துகொண்டு மறுபடியும் தகப்பனாரிடம் ஓடிவந்து "அப்பா பின்னலைப் பார்" என்றுள்.

சோக நினைப்பில் ஆழ்ந்திருந்த தந்தை, குழந்தை சொல்வதைக் கேட்டு விட்டுத் தன்னைச் சமாளித்துக் கொண்டு "குழந்தே! ரொம்ப பேஷ்!" என்றார். பாகீரதியும் உடனே சுப்பையாவிடம் வந்து "அண்ணா, திருகுப் பூவைப் பார்" என்றாள். ஏற்கனவே இந்த சம்பாஷணைகளைக் கூர்மையாய்க்கவனித்துத் தகப்பனாரைப்

போலவே சிந்தனையில் ஆழ்ந்திருந்த சுப்பையா "பாகீரதி, உனக்கு நகை போடாமலேயே அழகுண்டு. உன்னை அழகு படுத்தி நகை போட்டால் திருஷ்டியல்லவா வந்து விடும். இப்பொழுது உன் தலைப் பின்னலுக்கு உவமை சொல்ல, தமிழ் வார்த்தை அகப்படாமல் திண்டாடுகிறேன்; கார் மேகம் என்றும் கருநாகம் என்றும் சொல்வது எனக்குத் திருப்திப் படவில்லை என்றான்.

பாகீரதி, சிரித்துக்கொண்டு "அண்ணா, எப்போதும் உனக்குக் கவிதையைப் பற்றியும், தமிழைப் பற்றியுந் தான் கவலை; சரி. சரியான வார்த்தை அகப்பட்டதும் சொல்லு" என்று ஓடி விட்டாள், அடுத்தாத்து விசாலாக்ஷியிடம் பின்னலைக் காண்பிக்க. சுப்பையாவின் மனத்தை மேற்படி திருகுப்பூச் சம்பவம் ஒரு திருகு திருகிவிட்டது!

7. திருவாதிரைத் திலகம்

மார்கழி மாதத்தில் காலை நான்கு மணி. சுப்பையாவின் பாட்டி அவனை எழுப்பினாள். "அடே ஐயா, எழுந்து, சீக்கிரம் குளித்துவிட்டு வா; இன்று திருவாதிரை; கோவிலுக்குப் போக வேண்டும்" என்றாள். சுப்பையா ஸ்நானம் செய்துவிட்டு வந்ததும் எல்லோரும் கோவிலுக்குச் சென்றார்கள். தீபாராதனைகள் முடிந்தன. கூட்டத்தில் இடிபட்டுப் பிரசாதங்கள் வாங்கினர் சிறுவர்கள். சுப்பையா அவ்விடத்தை விட்டுக் கோவில் பிராகாரத்தில் சென்று தனது "காதலி, ராணி"யின் மீது மனதைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

மதனன் அருளை மதலைப் பருவத்திலேயே பெற்றவன் சுப்பையா. காமதேவன் அவருக்குக் காமத்தை மட்டும் அருளாமல், கலைச்சுவையை யறிவிக்கும் தோழன் ஆனான். "தென்றல் காற்றினிலே, மலைப் பேற்றினிலே, சுனையூற்றினிலே" மதனனைச் சந்தித்து அளவளாவுவான். ஒரு ஒதுப்புறமான திண்ணையில் அமர்ந்து கொண்டிருந்தான். அவனது தோழர் யாரும் அருகிலில்லை; சற்றுத் தூரத்தில் ஏழெட்டுப் பெண்கள் கல கலவென்று சிரித்து விளையாடிக் கொண்டிருந்தனர். அந்தக் கூட்டத்தில் சரஸ்வதி இருக்கிறாளா என்று தேடின சுப்பையாவின் கண்கள், அவள் அதில் இருப்பதைக் கண்டு, அவன் உள்ளம் களி கொண்டது. அவளிடம்பேச அவன் மனம் பரபரப்புற்றது. ஆனால் நாவெழவில்லை. காரணம்: காதற் கிளர்ச்சியோ, அல்லது சிறுமியர் கூட்டமோ, சொல்ல முடியவில்லை; சரஸ்வதியும் இதை அறியாமலில்லை. சிறிது நேரம் பெண்களுக்குள் 'சாந்துப் பொட்டு' இட்டுக் கொள்ளும் வேலை நடைபெற்றது.

ஒரு பெண் திடீரென்று அழ ஆரம்பித்தாள்: "இதோ பார் சரஸ்வதி, நீ வேண்டுமென்றே எனக்குப் பெரிய பொட்டாய் இட்டு விட்டாய்." என்றாள்.

சரஸ்வதி: இல்லையடி கண்ணே! வேண்டு மென்று பெரிதாக்க வில்லை; தானே அப்படி விழுந்து விட்டது. உன் முகத்திற்கு அத்தனை பெரியது வேண்டியது தான்.

சிறுமி: போடி, உனக்கு நினைப்பு எதிலேயோ போய் விட்டது. அதுதான் இப்படி இட்டுட்டே.

சரஸ்வதி; இல்லையடி சின்னம்மா; உனக்குப் பிடிக்காட்டா அதை அழிச்சுடு; வேறே இடறேன்.

சுப்பையா: (தனக்குள்) அந்தப் பெண்ணைப் பார் சரஸ்வதி கையினால் பொட்டு இடப் பெற்றும் திருப்தியில்லாமல் அழுகிறாளே, துஷ்டப் பெண்! சரஸ்வதி எத்தனையோ சமாதானம் செய்தும், அவள் முரண்டு பண்ணி அழுகிறாள். எனக்கு மட்டும் அவள் கையினால் பொட்டிடப் பெறும் பாக்கியம் கிட்டினால், எத்தனை சந்தோஷப் படுவேன்? தெய்வமே! அந்தக் கரங்கள் எனது உடலைத் தீண்டினால்? ....! 'மலர் மாரி பொழிந்தது' என மகிழ்வேன். சரஸ்வதியோ, என் எண்ணத்தைச் சிறிதும் அறியாமல் அந்த அடங்காப் பிடாரிப் பெண்ணை அலங்கரிப்பதில் முனைந்திருக்கிறாள்!... நிமிர்ந்து "இதோ பெண்களைக் காணவில்லையே, வீட்டிற்குச் சென்றனர் போலும்! சரஸ்வதியும் போய் விட்டாளா?"

சரஸ்வதி: சுப்பையா, நான் இங்குதான் இருக்கிறேன். ஒரு இடத்திற்கும் போகவில்லை. நெற்றியைக் காட்டு; பொட்டு வைக்கிறேன்.

சுப்பையா: (லஜ்ஜையுடன்) எனக்கா பொட்டு வைக்கப் போகிறாய்; என்னிடம் கொடு சாந்தை; நானே இட்டுக் கொள்கிறேன்.

சரஸ்வதி: கண்ணாடி யில்லாமல் எப்படி இட்டுக் கொள்வாய்?

சுப்பையா: ஏன், உன் கண்ணுக்குள் பார்க்கிறேன் என் முகத்தை.

சரஸ்வதி: ஏன் நான் இடக் கூடாதோ? உனது மாசு மறுவற்ற மதி போன்ற நெற்றியில், நான் திலகம் இடக் கூடாதா?

சுப்பையா: (சிறிது பயத்துடன்) இடக்கூடாது என்று சொல்லவில்லை; இது பொது இடமல்லவா? பலர் பார்க்கும்படி நமது விளையாட்டை விளையாடலாமா?

சரஸ்வதி: (ஏளனச் சிரிப்புடன்) ஆமாம், பொது ஸ்தலம்! கள்ளக் காதல் விளையாட்டெல்லாம் இங்கு நடைபெறுகிறது; கள்ளமற்ற மனத்துடன் செய்யும் காரியம் தவறு?

சுப்பையா: சரஸ்வதி! நீ சொல்வது சரி; ஆயினும்...?

சரஸ்வதி: ஆயினும் என்ன? பெரியவர்கள் சொல்வது போல் இலை மறைவு, காய் மறைவு வேண்டும் என்கிறாயோ? அம்மம்ம! இந்த ஆண்பிள்ளைகளை நம்பவே கூடாது. மனத்தில் அளவற்ற ஆசைகளை வைத்திருப்பார்கள். ஆனால், தம் ஆசைகளை மற்றவர் தெரிந்து கொள்ளக்கூடாது; மற்றவர் அந்த விதம் ஆசையும் படக்கூடாது. பார்வைக்கு சுகப் பிரும்ம ரிஷி வேஷம் போடுவது-பெண்களுக்கு ஆசை அதிகம் என்று வம்பு பேசுவது. அம்மம்ம, கொடியவர்கள்!

சுப்பையா: சரஸ்வதி! நீ சொல்வது ரொம்ப சரி. பெரிய ஞானியைப்போல் மனத் தத்துவங்களைப் பேச ஆரம்பித்து விட்டாயே.

சரஸ்வதி : சுப்பையா, கதையெல்லாம் இருக்கட்டும். பொட்டு வேண்டுமா — வேண்டாமா ?......

சுப்பையா : 'கரும்பு தின்னவும் கூலி கேட்பார் உண்டோ ?'

சரஸ்வதி பொட்டிடுகிறாள். சுப்பையா நாணமும் இன்பமும் மிகுதியானதினால் தலை கவிழ்கிறான். நிமிர்ந்தவுடன் சரஸ்வதியைக் காணவில்லை. கொஞ்ச தூரத்திலிருந்து சிரிப்பின் ஒலி, அலை அலையாகக் காற்றில் மிதந்து வந்தது.

8. கீரைக் குலதெய்வம்

[இடம் : எட்டையபுரம், சுப்பையாவின் வீடு]

சுப்பையாவின் தகப்பனார் கோபாவேசத்தோடு இருந்தார். மகனுக்குக் காரணம் விளங்கவில்லை. என்ன காரணமோ என்று யோசித்தான். பின்பு பாட்டியிடம் போய், "அம்மா! அப்பா எதற்குக் கோபங் கொண்டிருக்கிறார்?" என்று விசாரித்தான். பாட்டி சிரித்துக் கொண்டே, "இன்று சாப்பாடு சரியில்லை; அதுதான் அவனுக்குக் கோபம்" என்றாள்.

சுப்பையா : என்ன காரணம்?

பாட்டி : கீரை சமைக்கவில்லை இன்று; அது அவனுக்குக் குலதெய்வ மல்லவா?

சுப்பையா : (சிரித்து) பாட்டி! நமது குலதெய்வம் "சுடலை மாடன்" என்று முன்பு சொல்லியிருக்கிறாயே; இப்போ கீரை, குலதெய்வம் என்கிறாயே!

பாட்டி : சுப்பையா! கீரை இல்லாவிட்டால் அவனால் உயிரோடிருக்க முடியாது குலதெய்வத்தின் அருள் இல்லாவிட்டால், குலத்தார் எப்படி சந்தோஷமா யிருக்க முடியும்? உங்க அப்பாவுக்குக் கீரை இல்லாவிட்டால் உயிரோடிருக்க முடியாது.

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போதே சுப்பையாவின் கவனம் உள்ளே சமையலறையில் சென்றது. அவன் சித்தி கீரை மசித்துக் கொண்டிருந்தாள். ஒரு மண் சட்டியில் கீரை வெந்து கொண்டிருந்தது; அதை மத்தினால் கடைந்து கொண்டிருந்தாள். மத்து கரகர வென்று சுழன்றது. ஆனால் சட்டியை அழுத்தினால் சட்டி

உடைந்துவிடும். மத்தை அழுத்தியும் அழுத்தாமலும் லாகவத்தால் கடைந்தால்தான் கீரை நன்ருகப் பக்குவமாயிருக்கும். இதைப் பார்த்த சுப்பையாவுக்கு, தாமரை இலையின் மேல் தண்ணீர் ஒட்டியும் ஒட்டாமலு மிருப்பதும், புளியம் ஓடு ஒட்டியும் ஒட்டாமலும் இருப்பதும், ஞானிகள் குடும்பத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கும் நிலையும் நினைவிற்கு வந்தன. பெண் குலத்தின் மீதும் அளவற்ற தயையும் இரக்கமும் உண்டாயின. பெண்கள் மிகுந்த சகிப்புத் தன்மையும் பொறுமையும் உடையவர்கள். எத்தனையோ சிரமப்பட்டு விதவிதமான பக்குவங்கள் செய்து, தத்தம் கணவரையும் குழந்தைகளையும் போஷிக்கிருர்கள். என்ன அன்பு நமது பெண்களுக்கு! என்ற எண்ணங்கள் அவனுக்கு மன நெகழ்ச்சியைக் கொடுத்தன. பின்பு பேச்சு, விட்ட இடத்திற்குத் திரும்பியது.

பாட்டி! நமது குலதெய்வம் 'சுடலை மாடன்' என்று சொல்லி யிருக்கிருயே; அவனைப்பற்றி ஏதாவது கதை தெரிந்தால் சொல்லேன் என்ருன்.

பாட்டி: ஐயா, சுப்பையா, நமது ஊரும் நமது குல தெய்வமும் பெருமை வாய்ந்தவை. ஆறும், கோவிலும் அவ்வூருக்கு மிகவும் அழகு செய்யும். அவ்வூர் ஆற்றங் கரையில் மூன்று நதிகள் கூடுவதால் புண்ணிய நதி என்று புகழப்பெறும். சீவலப்பேரி வாசிகள் மிகவும் பக்தியோடு சுடலை மாடனைப் போற்றி வருகிருர்கள்.

சுப்பையா: பாட்டி, நாம் சிவன், விஷ்ணு முதலிய தெய்வங்களை வணங்குகிறேம்; குலதெய்வமாக வேறெரு தெய்வத்தை வரிப்பானேன்?

பாட்டி: ஐயா, எனக்கு உண்மையான காரணம் தெரியாது. ஒருவேளை இப்படி இருக்கலாமென்று நினைக்

கிழேறன் : பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் தேசத்தின் ரக்ஷகர்கள். திரிமூர்த்திகளும் உலகத்தைக் காக்கிறார்கள். ஆதலால் ஒவ்வொரு குடும்பத்தையும் காப்பாற்ற அவர்களது அருள்பெற்ற சாஸ்தா, பத்ரகாளி, மாடன் இந்தமாதிரி பெயருடைய தேவதைகளை அவரவர், தங்கள் பிரியத்திற்கேற்ப நியமித்துக் கொள்ளுகிறார்கள். நமது குடும்பத்துப் பெரியவர்கள் சிவ பக்தர்கள். ஆதலால் சுடலையாடியின் அம்சமான சுடலை மாடனைத் தமது குலதெய்வமாகக் கொண்டனரோ என்னவோ ?

சுப்பையா : பாட்டி, நமது முன்னோர் சுடலை மாடனைக் குலதெய்வமாகக் கருதியது பொருத்தந் தான் என்று தோன்றுகிறது. நாம் எல்லோரும் மரணத்திற்குப் பயப்படுகிறோம் ; நோய்க்குப் பயப்படுகிறோம். ஸ்மசானம் என்றால் நடு நடுங்குகிறோம் ; 'பேய்' என்றால் பிரக்ஞை தப்பி விடுகிறோம். ஆனால் அந்த மயானத்திலேயே இருந்து, பிறப்பிறப்பை சமமாகப் பாவிக்கும் கடவுள் 'சுடலை மாடன்'; சுடலையில் நடனம் புரிவான். மரண பயம் ஒழிந்தவன் ; பேய் பிசாசுகளை ஊழியராகக் கொண்டவன் ; வஞ்சனை, சூனியத்தை அழிப்பவன் ; அடியார்க்கு அடியன் ; வலியார்க்கு வலியன் ; மாயாண்டி ; எதற்கு மஞ்சான் ; எப்போது மஞ்சான். அவனைக் குலதெய்வமாக வரித்தால் அவனது அருளால் நமது குடும்பத்தவரும் பயமொழிந்தவராயும் பலவான்களாகவும் விளங்குவார்கள் என்று கருதியே, சுடலை மாடனை வரித்திருக்கிறார்கள்.

நமது முன்னோரிடம் மற்றொரு அருங்குணமும் இருந்திருக்கிறது. இந்த நாளைப்போல் பிராமணன் பிராமணனல்லாதான், பிராமண தெய்வங்கள் - சிவன் விஷ்ணு முதலிய உயர்ந்த தெய்வங்கள் ; மாடன், கருப்பண்ணன்,

முனிசாமி முதலியவை கீழ்ச்சாதித் தெய்வங்கள் என்று நினைக்காமல், மனத்திற்குப் பிடித்தது சரி என்று சுடலை மாடனைக் குலதெய்வமாகக் கொண்டனர்.

பாட்டி: ஐயா, என்னைக் கதை சொல்லச் சொல்லி விட்டு, நீயே சுடலை மாடனைப் பற்றி ஒரு அத்தியாயம், கதை சொல்லி விட்டாயே!

சுப்பையா: யார் சொன்னால் என்ன? கதை சொல்வதில் பொழுது கழிந்தது; அவ்வளவுதான் நான் நினைத்தது.

9. கல்யாணமும், கலைமகளின் அருளும்

சுப்பையாவின் விவாகத்திற்கு ஏற்பாடு நடந்தது; சிறுமி வள்ளியோடு கல்யாணம் நடந்தது. கல்யாணத்தின் போது மாலை மாற்றும் வைபவமும், நலங்கு, ஊஞ்சல் முதலிய விளையாட்டுக்களும் சுப்பையாவுக்கு மகிழ்ச்சியை அளித்தன. மாலை மாற்றும் போது அருகிலுள்ள சிறுவர்கள் :

"ரெண்டுக்கும் ரெண்டுக்கும்
மாலை மாலை
சவாரி, சவாரி மாலை மாலை"

என்று கோஷமிட்டு ஆர்ப்பரித்தார்கள். சுப்பையாவின் காதில் பட்ட குழந்தைகளின் பாட்டுக்கு, பொருள் கண்டு பிடித்தது அவன் மனம். பின்பு கல்யாணச் சடங்குகளில் தீவிரமாக ஈடுபட்டது அவன் மனம். "வள்ளிக்கு இசைந்த முருகேசன்" என்று அவன், நண்பர்கள் பரிகாசம் செய்தார்கள்.

சுப்பையாவுக்கும் வள்ளிக்கும் உருவத்தில் மிக ஒற்றுமையாக இருந்தது. குழந்தைகளின் வடிவழகைக் கண்டு மகிழ்ச்சி யுற்றும், ஆனால் திருஷ்டி, தோஷம் ஏற்பட்டுவிடப்போகிறதே என்ற, திகிலுங் கொண்டனர் பெற்றோர். தம்பதிகளுக்கு லட்சியங்கள் மட்டும் வெவ் வேறா யிருந்தன. சுப்பையாவின் லட்சியம்: காதல் நாடகங் களை வாழ்விலும் நடத்த வேண்டும்; உலகமே கண்டு வியப் புறும்படி குடும்ப வாழ்வு அமைய வேண்டும் ; தனக்கென வாழாது, பிறர் நலத்திற்காகவே வாழ வேண்டும் ; புதிய நாகரிகங்களை சிருஷ்டிக்க வேண்டும். பன்றியைப் போல் (சேற்றில் புரளும்) வாழ்க்கை நடத்தலாகாது, அதாவது

"தேடிச் சோறு நிதம் தின்று, பல சின்னஞ்சிறு கதைகள் பேசி, மனம் வாடித் துன்ப மிக உழன்று, பிறர் வாடப் பல செயல்கள் செய்து" வாழும் வாழ்வு.

வள்ளியோ, சாதாரணமான வாழ்வையே எதிர் பார்த்தாள். கணவனும் மனைவியும் அழகாக, ஒற்றுமை யாகக் குடித்தனம் செய்ய வேண்டும். கணவன் நிறையச் சம்பாதிக்க வேண்டும், பெரிய உத்தியோகம் வகிக்க வேண்டும். அதாவது திவான் என்பது போன்றவை — அவளது லட்சியங்கள்.

சுப்பையா வள்ளியிடம் காதற் பாட்டுக்கள் பாடு வான்:

"தேடக் கிடையாத சொர்ணமே
உயிர்ச் சித்திரமே மட அன்னமே
சுரோசிக்குது பால் தயிரன்னமே
மாரன் சிலைவேல்கணை கொலை வேலென
விரிமார்பினில் நடுவே தொளை செய்வது
கண்டிலை யின்னமே என்ன
செய்தேனோ நான் பழி முன்னமே ... ..."

என்று அவள் முன்பு முழந்தாளிட்டு வேண்டிக் கொள் வான். வள்ளியோ அடக்க ஒடுக்கமான பெண். அசாத்திய வெட்கங் கொண்டவள். அவன் பாட்டைக் கேட்டு நாணிக் கோணி, எங்காவது போய் மறைந்து விடுவாள். சுப்பையாவுக்கோ, பார்க்கு மிடத்தி லெல்லாம் வள்ளி யைப் போல் பாவை தோன்றும். அவள் முகம் அவனுக்கு புது ரோஜா. உலகத்து அழகின் எழில் முழுவதையும் வள்ளியிடம் காண்பான். கவிதா சக்தி பெற்றவனாதலால் உடனே பாட்டுத் தோன்றி விடும். வள்ளிக்கு இது பரம சங்கடமா யிருக்கும். தோழிகள் பரிகாசம் தாங்க முடியாது. " இப்படியா பெண்டாட்டிப் பித்துப் பிடித்து

அலைவார்கள் " என்று எண்ணுவாள். அவளது அசட்டுப் பிடிவாதங்களும் அவனுக்கு ஊடலாக மாறி இன்பமளித்தன. சில சமயம் ஆற்றங்கரை மண்டபத்திலும், அரச மரத்தடியிலும், மேகங்களின் கூட்டத்திலும், நாற்சந்திகளிலும் சரஸ்வதி, கவிதை புருவத்தில் தோன்றி அவன் காதலைத் தணிப்பாள். சில வேளை, தனக்குள்ளேயே, இதயத் தாமரையிலேயே அவள் "வீணையும் கையும் விரியு முகமலர் விள்ளும் பொருளமுதம்" கொண்டு வீற்றிருப்பாள். அவனது வெள்ளை மனமோ, கலைத்தேவியிடம் பறி போய்விடும்.

10. பல பல தோற்றம் பாரத நாடு

சுப்பையாவின் தந்தை உலகை விட்டு நீங்கினர். உலகத்தி லேயே தனக்கு ஒருவரும் இல்லை என்ற உணர்ச்சி ஏற் பட்டுவிட்டது அவனுக்கு. வீடு, வாசல், சொத்து, கடன் எல் லாம் சுப்பையாவுக்குப் பொருட்டாகவே தோன்றவில்லை. அதிகப் பொருள் சேர்க்க எண்ணி, ஆனால் அதற்கு நேர் மாருகக் கைப்பொருளும் போய், வறுமைவாய்ப் பட்டு, அதனுல் நோயுற்று இறந்த தந்தையின் நிலை, சுப்பையாவை எதிலும் பற்றற்று நிற்கப் பழக்கியது. பட்டினத் தடிகளைப் போல, இடுப்புத் துணியோடு காசிக்குப் புறப் பட்டான். காசியில் அத்தை யிருந்தபடியால் அங்கு போக அவன் மனம் விரும்பியது. இளம் மனைவியை விட்டுப் பிரிவது ஒருபுறம் அவனைத் துயரத்திலாழ்த்தியது. ஆயினும் படிப்பை உத்தேசித்துக் காசி செல்வது அவசியமா யிருந் தது. ரயிலில் செல்லும்போது அவன் கண்ணுக்குத் தென் பட்ட காடும், மலையும், கடிய வனந்திரமும், ஆறும் நதியும் அவனுள்ளத்திலே கவிதை வெள்ளத்தை எழுப்பியது. விடுதலை பெற்ற வானம்பாடியைப் போல் மனம் உற்சாக மடைந்தது. தனக்குள்ளே யோசிக்கலானன்: பிரயாணம் மனிதர்களுக்கு எத்துணை பயன் அளிக்கிறது; பலதிறப் பட்ட காட்சிகளையும், பலபல சுபாவமுள்ள மனிதரையும் பார்க்க ஏதுவாகிறது; அதனுல் மனமும் விரிகிறது. இறை வனின் படைப்பின் மாண்பை அறிய முடிகிறது. ரயிலில் எத்தனையோ காட்சிகள் அவனுக்குத் தோன்றின. இரண்டு துறவர், தமது இறந்த அன்னையின் அஸ்திகளை ஒரு குடத்தில் அடைத்துப் பத்திரமாகக் காசிக்குக் கொண்டு செல்லுகின்றனர். இவர்களுக்குத் தாயிடம் எத்தனை அன்பு! " தாயின் சேவடிக்கே பணிசெய்திடுந்

துளுவர்'' என்று அவன் வாய் வாழ்த்தியது. சென்னை வரைக்கும் தமிழர்களே கண்களுக்கு விருந்தளித்தார்கள். ஸெண்ட்ரல் ஸ்டேஷனில் ரயில் ஏறும்போது தெலுங்கரும், கன்னடியர்களும், துருக்கரும், மார்வாடிகளும் வகைவகையாக வந்து ஏறினார்கள். ஒருவன் வாழைப்பழம் விற்றான். தெலுங்கர் 'அரடிப் பண்டு' என்று கூவினர். தமிழன் 'வாளப் பளம்' என்று கூப்பிட்டான். 'அரே கேலாவாலா' என்று கை தட்டி யழைத்தனர் துருக்கர். அருகிலிருந்த இரண்டாம் வகுப்பில் உட்கார்ந்திருந்த ஆங்கிலேயர், 'பட்லர்'இடம் "பிளாண்டன் ப்ரூட் வாங்கு தம்பி'' என்றார். இத்தனை குரலையும் கவனித்த சுப்பையா "பொருள் ஒன்று,'' "வடிவம் பல;'' "தெய்வம் ஒன்று நாமம் பல'' என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டான். அவன் மனத்தில் "சமரஸம்'' உண்டாயிற்று. உலகத்தை ஒரு மாலையாகவும் அதிலுள்ள பல வகுப்பாரையும் பல நிற மலர்களாகவும் அவன் மனம் கற்பனை செய்தது. நெல்லூருக்குப் பக்கத்தில் ரயில் சென்றுகொண்டிருந்தது. தெலுங்கர்கள் கூட்டமாக நுழைந்தனர். ஒருவரையும் லட்சியம் செய்யாமலும், ஒருவருக்கும் பயப்படாமலும் முகத்தில் வீரந்துலங்கி நிற்கும் அவர்களைப் பார்த்ததும் அத்தை, "சுப்பையா, இந்த ஜனங்களைப் பார்த்தாயா! எத்தனை துணிச்சல் இவர்களுக்கு'' என்றார். "ஆம், சிந்தை துணிந்த தெலுங்கர்'' என்று அவன் முணுமுணுத்தான்.

"ஹௌரா, ஹௌரா'' என்ற சத்தம் உண்டாயிற்று. கல்கத்தா ஹௌரா ஸ்டேஷனில் இறங்கி, சத்திரத்தில் பூஜை சாப்பாடு இவைகளை முடித்துக் கொண்டு போகலாம் என்று தீர்மானித்தார்கள். சுப்பையாவுக்கு வங்காளிகளைக் கண்டதும் ஒரு புனித உணர்ச்சி ஏற்பட்டது. "வந்தே'' என்று அவர்கள் ஒருவருக்கொருவர்

வணக்கம் தெரிவித்துக் கொள்வதும் அவனுக்கு இனிய காட்சியா யிருந்தது. காசிக்கு அருகே ரயில் சென்றதும் "பொன்னகரத் தேவர்களோ" என்னும்படி பல சுந்தர ஸ்திரீ—புருஷர்களை அவன் சந்தித்தான். "அவர்கள் ஹிந்துஸ்தானிகள்" என்று அத்தை அவனுக்குச் சொன்னாள். காசிக்குப் போக வேண்டுமே என்று தனது அத்தானிடமிருந்து சிறு சிறு ஹிந்தி மொழிகளைக் கற்றுக் கொண்டிருந்தான்; அதனால் ஹிந்துஸ்தானிக்காரருடன் சம்பாஷிக்க முடிந்தது. காசிக்குப்போய் கல்லூரியிலும் சேர்ந்து விட்டான். சம்ஸ்கிருதமும், ஹிந்தியும் அவனுக்கு சுலபமாய் வந்தன. ஓரிரண்டு மாதங்களுக்குள்ளாகவே, 'மேக சந்தேச'த்தையும், 'காதம்பரி'யையும், 'சாகுந்தல'த்தையும் படித்து ரஸிக்கும் அளவு ஸம்ஸ்கிருத ஞானம் அவனுக்கு ஏற்பட்டது.

காசியில் மணிகர்ணிகா கட்டமும், கேதார கட்டமும், சுப்பையாவின் வாசஸ்தலம். காசியில் அவனுக்குப் பல நண்பர்கள். சிறு பையனிலிருந்து, பட்டை பைராகி வரை அவனுக்கு எல்லாரும் நண்பர்தாம். பட்டாடையும், பணமும் அதிகமான காசி நகரில் பக்திக்கு மட்டும் குறைவுண்டா? பண்டிதருக்குத் தான் குறைவுண்டா? எங்கும் விசாரணைகளும் ஆராய்ச்சிகளும் மலிந்து நின்றன. அன்ன சத்திரங்கள் ஆங்காங்கு ஆயிரக்கணக்கானவர்களுக்கு அன்னமளித்தன. அநுமார் கோவில், அநேகருக்குத் தேகப் பயிற்சி சாலையாக விருந்தது. அஞ்சனா தேவியின் மகனான ஆஞ்சநேயனைத் தங்களுக்கு 'கஸரத்' பழக்கி வைக்கும் குருவாக ஹிந்துஸ்தானியர் வரித்து 'கஸரத்' செய்வார்கள். அவர்கள் வஜ்ர சரீரத்தைப் பார்த்த சுப்பையா, நமது நாட்டுக்கு இவர்கள் காவற் களஞ்சியங்கள் என்று நினைப்பான்.

நமது புண்ணிய பூமியாகிய காசியிலிருந்தாலும், சுப்பையாவுக்குத் தமிழ்நாட்டுக் காஞ்சிமா நகரந் தான் மனத்தில் தோன்றிக் கொண்டே யிருக்கும். இந்தக் காசி நகரத்துப் புலவர் பேச்சை, காஞ்சி நகரத்துப் புலவர்கள் கேட்க வேண்டும்; அதற்கு ஒரு கருவி கண்டுபிடிக்க வேண்டுமே என்ற யோசனையில் ஆழ்ந்து விடுவான்.

11. உண்மையின் உயர்வு

காசியில், சுப்பையா பள்ளியில் படித்தாலும் தேசிய இயக்கம் வேறு அவன் மனத்தில் புகுந்து விட்டது. நல்ல பண்டிதர்களையும், அறிவாளிகளையும் சந்தித்து நாட்டின் நலங்களுக்கான யோசனைகளைச் செய்வான். வங்காளிகளும், ஹிந்துஸ்தானிகளும் தங்கள் தாய் நாட்டின் பேரில் வைத்திருக்கும் அன்பு, நன்றாக அவர்கள் செய்கையில் பிரதிபலித்தது. ரஜபுத்ர இளைஞர் சிலரும் அவனுக்குத் தோழராயினர். அதனால் உண்மைக் காதல், நாட்டன்பு இவை மனத்தில் உரம்பெற்றன. ஆனால் தமிழ் நாட்டை எண்ணும்போதெல்லாம் அவன் மனம் புழுக்க மடையும். "என்று என் தமிழ் நாடு, பழம் பெருமை பெற்று உயர்வடையும்" என்று ஏங்குவான்.

கலை நுட்பங்களிலும், கவி வன்மையிலும் சிறந்த சோழ—பாண்டியர் அரசாண்ட நாடு இன்று எவ்வண்ணம் சீர்கேடு அடைந்து விட்டது பார்த்தாயா என்று எண்ணும்போதே அவன் ரத்தம் கொதிப்பேறும். இதற்கு என்ன செய்வது என்ற யோசனையிலேயே ஆழ்ந்து விடுவான்.

ஓர் நாள் அரிச்சந்திர கட்டத்தின் வழியே சென்று கொண்டிருந்தான். ஓர் நண்பனும் அவனுடன் சென்றான். அன்று ஒரு திருவிழா: அரிச்சந்திரனைப் பற்றியது. அதனால் வழி நெடுக அரிச்சந்திரன் கதையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் விளக்கும் பொம்மைகள் கடைகளில் நிறைந்திருந்தன. சுப்பையாவின் நண்பன் "சுப்பையா, பார்த்தாயா இந்த விஸ்வாமித்திர மகரிஷியின் திமிரை! அப்பாவியான அரிச்சந்திரனை என்ன பாடு படுத்தி வைத்திருக்கிறார்!" என்றான்.

சுப்பையா: என்ன படுத்தினூர்? என்னைக் கேட்டால் விசுவாமித்திரர் சகல விதத்திலும் உத்தமர் என்று தான் சொல்வேன்.

நண்பன்: இதென்னடா இது; புதுக் கதையா யிருக்கிறதே! விசுவாமித்திரர் நல்லவர் என்று இதுவரை ஒருவரும் சொல்லிக் கேள்விப் பட்டதில்லையே.

சுப்பையா: நீ கேள்விப் படாததால் ஒரு மகரிஷி குற்றவாளி தான் என்று ஊர்ஜிதம் செய்து விடலாமா?

நண்பன்: தான் சொன்னதை ஸ்தாபிக்க வேண்டும் என்பதற்காக ஒரு அன்பனைத் துயருறுத்தலாமா?

சுப்பையா: சரி. முதலில் நான் கேட்கும் கேள்விக்கு விடை கூறு; பார்ப்போம். 'சத்யவாதி' என்று உலகம் புகழும் அரிச்சந்திரன் எத்தனை தடவை மாறிப் பேசி யிருக்கிறுன்?

நண்பன்: (கோபத்தோடு) எந்த இடத்திலே மாறிப் பேசினுன்?

சுப்பையா: கவனி. முதலில் சந்திரமதியைக் காதல் மணம் செய்து கொள்ளும் சமயத்தில் அக்னி சாக்ஷியாக 'உன்னைக் கைவிடமாட்டேன்' என்று வாக்குக் கொடுத்து விட்டு, காசி தேசத்தில் ஒரு பிராமணனிடம் அவளை விற்க முற்பட்டான். அவன் பிரமாணம் அப்பொழுது எங்கே போய்விட்டது? விசுவாமித்திரரிடம் வாக்குத் தவறக்கூடாது என்பதற்காக, சந்திரமதி யிடம் வாக்குத் தவறலாமா? அது போகட்டும். விசுவாமித்திரன் எதற்காக இத்தனை கடும் சோதனை செய்தான் என்பது உனக்குத் தெரியுமா?

நண்பன்: அரிச்சந்திரன், வாக்குப் பிறழும்படி செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தினுல்.

சுப்பையா: நண்பா, இதென்ன மனப்பான்மை நம்மவருக்கு? எதிலும் கெட்டதையே காண்பார்கள்—துரியோதனனைப் போல. விசுவாமித்திரன் சூது வாது அறியாதவன். அரிச்சந்திரன் அரிதாகிய லட்சியத்தில் ஆசை வைத்தான்; அதற்காக விசுவாமித்திரனை வேண்டினான்.

நண்பன்: என்ன வேடிக்கை; உன் கதையே புதிதாக அல்லவா இருக்கிறது!

சுப்பையா: புதிதல்ல-பழங்கதைதான். விசுவாமித்திரனின் தவ வலிமையைக் கண்ட அரிச்சந்திரன் இவனிடம் கேட்டான்: "முனிவரே! மும்மூர்த்திகளையும் என்னுள்ளே காண வேண்டும்; அதற்கு வாக்கைச் சுத்தம் செய்ய வேண்டும். அந்த வரம் வேண்டும்.

விசுவாமித்திரன்: அன்பா என்ன வரம் கோரினாய்—கொடுக்க முடியாத வரம்—கிடைக்க முடியாத பேறு வேண்டினாய், நீயோ சுகபோகங்களில் திளைக்கும் அரசன்; நானும் இதை நிச்சயமாகச் சொல்ல முடியாது.

அரிச்சந்திரன்: முனிவரே தாங்களோ மும்மூர்த்திகளினும் சிறந்தவர் என்பது என் எண்ணம். தங்களால் முடியாத காரியம் உண்டா? திரிசங்குவிற்காக சொர்க்கமும் ஸ்ருஷ்டி செய்த தேவரீர், எனக்கு வாக்கு வலிமை அளிக்கக் கூடாதா? நாவைக் காக்க எனக்குத் திடமளிக்க வேண்டும்.

விசுவாமித்திரன்: சரி, அதற்கு மனத்தை அலையாமல் நிறுத்திக் கொள்ள வேண்டும். முதலில் நான் உனக்காக முயன்று பார்க்கிறேன்."

இந்த சம்பாஷணைகளுக்குப் பின்புதான் விசுவாமித்திரன் வசிஷ்டரோடு வீண் சண்டை வளர்த்து அரிச்சந்திரனைப் பொய் சொல்லச் சொல்வதாகச் சபதம் செய்தான். அரிச்சந்திரன் தன்னுள் பரம்பொருளைக் காண்பதற்காகச்

செய்த பெரு முயற்சிதான், விசுவாமித்திரரின் கடுஞ் சோதனை என்று நாம் சிந்திக்கிறோமே அந்த விஷயம். ஒருவன் கடவுள் மேல் பாரத்தைப் போட்டுத் தன்னைக் கவனியாமல், கடவுள் விதித்த பணிகளைச் செய்து வருகிறானோ, அவன் தன்னுள்ளே கடவுளைக் காண முடியும் என்ற உண்மையை அரிச்சந்திரன் கதையிலே காண்கிறோம். விடா முயற்சியினால் எதையும் வென்று விடலாம் என்பதோடு, உலகில் உயர்ந்த லட்சியம் பெறுவதைத் தடுப்பதற்கு எத்தனை இடையூறுகள் காத்திருக்கும் என்பதையும் அரிச்சந்திரன் உதாரணம் நமக்குத் தெரிவிக்கிறது. ஒருவனை உண்மைப் பாதையில் நடத்திச் செல்வதற்கு எத்துணை சாகசம் வேண்டும் என்பது விசுவாமித்திரனைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். "தன் பலங்கொண்டு அம்பலம் ஏறவேண்டும்" என்பது போல குடும்பத்தில் மனைவி, மக்கள் ஒற்றுமையோடிருந்தால் எந்தக் கொடுமையையும் பொறுத்து விடலாம் என்பது சந்திரமதியின் குணத்தினால் அறியலாம். கடைசியாகத் தெய்வம் என்பது சத்ய ஸ்வரூபத்தில் நிற்கிறது என்பதும், அது நமக்குச் சொல்லுருவத்தில் காண்கிறது என்பதும் இந்தக் கதையிலிருந்து நன்கு தெளிவாகிறது. தாங்க முடியாத கஷ்டங்களையெல்லாம், சத்தியம் சொல்கிறோம் என்ற ஒரு மகிழ்ச்சியினால் மனிதன் பொறுத்துக் கொள்ளலாம். சத்திய நாட்டத்தில் எவனுக்கு மனம் செல்லுகிறதோ அவன் மனிதனன்று — அவன் அமரன்; அவன் கடவுள் என்றான் சுப்பையா.

நண்பன்: சுப்பையா, நீயும் அரிச்சந்திரனுக்கு ஒப்பானவன் தான்.

சுப்பையா: நண்பா, என் வாழ்வை சத்தியத்திற்கே அர்ப்பணம் செய்யத் தயாரா யிருக்கிறேன். முயற்சி வெல்க.

12. அரணில்லாச் சிறைக்கு அன்புடன் செல்லல்

[இடம் : தென்னாட்டின் தலைநகரம்—நேரம் : இரவு மணி 12.]

சுப்பையா தூக்கம் பிடிக்காமல் உலாவிக் கொண்டிருக்கிறான். தனக்குள்ளேயே பேசிக்கொள்ளுகிறான்: வங்காளத்தில் எழுந்துள்ள தேசீயப் புயல் நமது தென்னாட்டிலும் வீசத் தொடங்கி விட்டது. நாடெங்கும் சுதந்தர வேட்கை கொண்ட மக்கள் இருக்கத் தான் செய்கிறார்கள். ஆனால் தேசத்திற்குக் காவலாக, முன்னேக்கிச் செல்பவர் குறைவு தான்... திசைகாட்டி யில்லாத மரக்கலம் போல் மக்கள் வாடுகிறார்களே! மனத்தில் நாட்டின் மீது அளவற்ற அபிமானம் இருந்தாலும், அதை வெளிக் காட்ட அவர்கள் துணிவு பெறவில்லையே! தியாகாக்னியில் தம்மை ஆகுதி செய்யும் தீரர்கள் தமிழ் நாட்டில் அரிதா யிருக்கிறதே!

நந்தன் பிறவியில் பறையன்; ஆனால் கடவுளைக் காணவேண்டும் என்ற உயர்ந்த லக்ஷியங் கொண்டவன். ஆண்டையின் அடியும், தடியும் அவனது தீர்மானத்தை அசைக்க முடியவில்லை. கடைசியில் தன் விருப்பம் நிறைவேறி எம்பெருமானின் பக்த சிகாமணிகளில் தலைசிறந்தவனாக் விளங்குகிறான். ஆம், எந்தக் காரியத்திலும் மனவுறுதியோடு இறங்கினால் ஜயம் நிச்சயம்! பதறின காரியம் சிதறும். தைரியமாகச் செல்வேன். (அருகில் படுத்து உறங்கும் மனைவி வள்ளியும், குழந்தை கனகமும் அவன் பார்வையில் படுகிறார்கள்.) இதோ என் மனைவி வள்ளியும், குழந்தை கனகமும் தூங்குகிறார்கள். ஐயோ பாவம்! சூதுவா தறியா தவர்கள்! நான் சென்றுவிட்டால் இவர்கள்

அவதிப் படுவார்களே! இவர்களைப் பாதுகாப்பதில் நான் முனைந்தால் தேசத்திற்கு என் பணியைச் செய்ய வேண்டாமா? பிறவிப் பயன் என்பது என்ன? பெண்டு பிள்ளைகளைக் காப்பது மட்டுந்தானா? சீ! இதென்ன சுயகாரியப் பித்து. நான் தேசத்திற்காகச் செல்வேன்; இவர்களை ஆண்டவன் காப்பான். அதோ! தேவியின் கைகள் என்னை 'வா, வா' என்று அழைக்கின்றன. செல்வேன்.

13. காதலின் மாண்பு

[இடம்: புதுவையில் சிறுவீடு. கடற்கரையிலிருந்து சுகமாய் வாயு ப்ரவேசம் ஆகிறுன். சுப்பையாவின் வாலிப முறுக்கு இப்பொழுது அவனிடம் காணப் படவில்லை: தவத்தின் பெருமை முகத்தில் ஒளி வீசுகிறது. அவனைச் சுற்றிலும் பத்திரிகைக் கூட்ட மும், எழுதுகோல், பழம் பாய், வெற்றிலை பாக்குத் தட்டு முதலிய அவனுடைய பரிவாரங்களும் இருக் கின்றன. வள்ளி, முகத்தில் புன்னகை தவழ வரு கிருள்.]

வள்ளி: என்ன செய்தி! என்னமோ யோசனையில் ஆழ்ந்திருக்கிறீர்களே!

சுப்பையா: வள்ளி, எனக்குக் கூடுவிட்டுக் கூடு பாயத் தெரியாமல் தவிக்கிறேன்.

வள்ளி: ஏன், இதென்ன பிரமாதம்! யோக சாதனை பண்ணிஞல், தானே தெரிகிறது.

சுப்பையா: அதற்குக் காலமும், அளவற்ற பொறுமை யும், அசாத்ய சாதகமும் வேண்டும்.

வள்ளி: சரிதான்; ஆசை பெரிது, திறமை சிறிதா யிருக்கிறதென்கிறீர்கள். ஆஞல் நமது மதிவன்மையால் மற்றவர் மனக்கருத்தை யறிந்து கொள்ளவோ, மற்ற வரைப் போலவே யிருக்கும்படி நம் மனத்தை மாற்றிக் கொள்ளவோ தங்களால் முடியும் அல்லவா?

சுப்பையா: முடியும். இதோ தென்னை மரத்தில் வீற்றிருக்கும் காக்கைகளின் மஞேபாவம் எனக்குத் தெரி கிறது. உயரப் பார்! இந்தத் தென்ஞேலைப் பந்தலில் தொங்கும் கயிறுகளைப் பார். அவைகள் காற்றில் அசைந் தாடுவது என் மனத்தில் புதியதொரு கிளர்ச்சியை உண்டு

பண்ணுகிறது. ஒவ்வொன்றும் இரைந்துகொண்டு காற்று வருகிறது. அதை வாகனமாய்க் கொண்டால் தேச தேச மெல்லாம் சுற்றி வரலாம்.

வள்ளி : ஆம், வாயுவை வாகனமாய்க் கொண்டால் உலகமுழுதையும் சுற்றி வரலாம். சிறிது நேரத்திற்கு முன் கூடு விட்டுக் கூடு பாயத் தெரிய வில்லை யென்று ஏங்கினீர்களே ! எல்லாப் பொருளிடத்தும் ஊடுருவிப் பாயும் சக்தி தான் உங்களுக்கு இருக்கிறதே ! அப்படி யிருக்கும் பொழுது நம் உடலை விட்டு மற்றொரு சரீரத்தில் புகுவானேன் ?

சுப்பையா : வள்ளி, நீ படிக்காத பெண் ; ஆனாலும் உனக்குத் திறமை யதிகம் ; ஆராய்ச்சியும் அதிகம்.

வள்ளி : தங்களுடனே கூட வாழ்ந்து வரும் எனக்கு இதுகூடத் தெரியாவிட்டால் என்ன பிரயோசனம் ? அப்பா சாஸ்திரி வயிற்றில் பிறந்து, குப்பா சாஸ்திரி வீட்டில் வாழ்க்கைப் பட்டு 'லவணம்' என்றால் இன்னதென்பது தெரியாதா என்று சொன்னாளே ஒரு நாட்டுப் பெண்...

சுப்பையா : போதும் உன் பரிகாசம். நீ அவ்விதம் உனக்குத் தெரியாததைத் தெரியும் என்று சொல்ல மாட்டாய் என்பது எனக்குத் தெரியும்.

வள்ளி : ஸ்வாமி, தாங்கள் சொல்வதெல்லாம் என் மனதுக்கு உகந்ததாய் இருக்கின்றன. ஆனால் மற்ற எல்லாரும் தங்கள் உபதேசத்தை என்னைப்போல் கேட்கிறார்களா என்பது சந்தேகந் தான். தங்களைப் பார்க்கும்போதே ஏதோ அபூர்வமான ஒன்றைப் பார்க்கும்போது உண்டாகும் வியப்பு அவர்கள் முகத்தில் ஜ்வலிக்கிறது.

சுப்பையா : அதனாலென்ன ? ஆறும் மாசம் அன்னப் பிராசனத்தின் போது தின்னத் தொடங்கிய சோற்றை அறுபதாம் வயதிலும் வெறுக்கத் துணியாத மனிதர்

என்னை வியப்புடன் நோக்குவதில் ஆச்சரியம் ஒன்று மில்லைத்தான். அவர்கள் யாரையாவது மோசஞ் செய் தாகிலும் அதிரடி யடித்தாகிலும் வயிறு வளர்ப்பதைப் பற்றிய யோசனையில் நாள் முழுதும் செலவிடுவார்கள். நான் நாட்டின் நன்மைக்கு ஏதாகிலும்செய்வதோ யோசிப் பதோ அவர்களுக்கு வியப்பையும் கேலியையுந்தான் விளை விக்கும். அது கிடக்கட்டும். வள்ளி! இந்த மனிதர் நம்மை அவரோடு சமமாகக் கருதவில்லையே, என்று நீ வருந் தாதே! தேவர் நம்மைத் தங்களோடு சமமாகக் கருதுவர்.

வள்ளி: நன்று. ஆனால் தேவரை நம்மோடு கலந்து வாழச் செய்யும் சக்தி நமக்கு ஏற்பட்டாலன்றோ தாங்கள் சொல்வது உண்மையாகும்!

சுப்பையா: பேஷ்! இது நல்ல கேள்வி! அவர்களை எப்படி நம்மோடு உறவாடச் செய்வது? அவர்களை எந்த விதமாக அழைத்தால் அவர்கள் வந்து குடி புகுவார்கள். "தேவர் வருக" என்று செய்ய தமிழ் மொழியில் பாடி விட்டால் அவர்கள் நமது ஆவலறிந்து வருவார்கள். அவர்கள் வந்து விட்டால், பின் நமக்கு எதுதான் கஷ்டம்? செந்தமிழ் மொழியில் பராசக்தியைப் போற்றுவேன். அவளருளால் தேவர் நம்மோடு கலந்து உறவாடுவர். மானிடச்சாதி வலிவுறும்; அடிமை வாழ்வு விடுபடும்.

(பாடுகிறன்)

வேண்டுமடி எப்போதும் விடுதலை, அம்மா! (வேண்டுமடி)
தூண்டுமின்ப வாடைவீசு துய்ய தேன்கடல்
சூழநின்ற தீவிலங்கு சோதி வானவர்!
ஈண்டு நமது தோழராகி எம்மொடமுத முண்டு குலவ
நீண்ட மகிழ்ச்சி மூண்டு விளைய
நினைத்திடுமின்ப மனைத்து முதவ (வேண்டுமடி)

14. மறைந்த ஒளி

[வானத்தில் தேவர் தோன்றுகிறார்கள். படுக்கையிலிருந்த பாரதியின் கைகள் வானை நோக்கிக் குவிக்கின்றன.]

இந்திரன் : மகனே, வருக. பாரதி! மனிதர் துயரை மாற்றினாய். எல்லோரும் ஒன்றென்று எங்கும் பறைசாற்றினாய்! வல்லமை தன்னை மனிதருள் நுழைத்தாய்! சொல் வன்மையினால் சுதந்திர மீந்தாய்! தான் பெறு மின்பம், மற்றவர் பெறச் செய்தாய்! லட்சிய வாழ்வு நிலைபெறச் செய்தாய்! வாழ்க உன் செய்கை! வாழிய! வாழிய!

பாரதி : ஐயனே!

எந்தன் நாடு இடும்பைகள் நீங்கிப்
பந்தம் நீங்கிப் பாசம் விலகி
அந்தமில் வாழ்வு அடைந்ததெனவே
நின்மொழி கேட்டே நிம்மதி பெற்றேன்.

இந்திரன் : உன் விருப்பத்தின் படியே இனி உலகம் நடைபெறும். செல்வோம் விண்ணகம்.

(மறைகிறார்கள்.)

முற்றிற்று

ஓம்கார நூலகம்

புதுக்கோட்டை

Wrapper printed at P. A. S. Press, Post Box No. 349, Madras - 2